# திருச்சியில் பொதுச் செயலாளர் துணி விற்ருர்!

## மக்கள் மகிழ்ச்சி!
## மாபெரும் விழிப்புணர்ச்சி!!

## தி. மு. க. வீரர்தம் சேவை

### 'ஆதிக்கபுரி'க்கு எச்சரிக்கை


# திராவிடநாடு

| மலர் 11 | 11—1 53 | இதழ் 28 |
|---|---|---|

விலை 1 அணா


ஜனவரி 4-ஆம் தேதி காலை திருச்சி பூராவும், வாழை மா, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எல்லா தார் ரோடுகளிலும், சுவர்களிலும், அண்ணா வருகையைப் பற்றியும், நெசவாளர் பிரச்சினை பற்றியும் எழுதப்பட்டிருந்தது.

'அண்ணா வந்துவிட்டார்' என்ற செய்தி நகர் முழுதும் பரவியவுடன் காலை 7 மணிக்கே பொதுமக்களும் கழகத் தோழர்களும் அண்ணா தங்கியிருந்த திராவிடப் பண்ணையின் முன்பு கூடிவிட்டார்கள். துணி விற்பனை திராவிடப் பண்ணை முன்பே ஆரம்பிக்கவேண்டியதாயிற்று. நன்ருக அலங்கரிக்கப்பட்டு 'கைத்தறியை ஆதரியுங்கள்!' என்ற படங்களைத் தாங்கிய மோட்டார் வேனில் துணிகளை அடுக்கிக்கொண்டு, பொதுச்செயலாளர் அவர்கள் உண்மை வியாபாரியைப் போன்று 'கைத்தறித் துணிகளை வாங்குவீர்' என உருக்கமாக சொல்லிக்கொண்டு போனார். அவரைத் தொடர்ந்து அ. பொன்னம்பலனார், தில்லை வில்லாளன், நாகூர் ஹனீபா, எம். எஸ். மணி, ஜி. பராங்குசம், எ. பி. தர்மலிங்கம் மற்றும் கழகத் தோழர்கள் சென்றபோது, சிந்தாமணி தி. மு. க. செயலாளர் தோழர் ராசரெத்தினம், டி. வி. பொன்னுசாமி, மருதநாயகம், விஸ்வம் ஆகியோர் மலர் மாலையிட்டு, அண்ணாவை வரவேற்றனர். பிறகு, நாகூர் அனீபா தன் குழுவினருடன் நெசவாளர் பண் பாடினார். அண்ணா எல்லோரையும் 'க்யூ' வரிசையில் துணி வாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

மலைக்கோட்டை அடைந்தவுடன், கழகச் செயலாளர் டி. என். ராசரெத்தினம், டி. எம். ரத்தினம் மற்றும் கழகத் தோழர்கள் தலைவர்களை வரவேற்று மலர்மாலை அணிவித்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு சின்னக் கடை வீதியிலிருக்கும் தீப்பொறி அலுவலகம் வந்தவுடன் தோழர் சி. பி. சிற்றரசின் வாழ்க்கைத் துணைவியாரும், அவரது குழந்தைகளும் அண்ணாவிடம் துணிகள் வாங்கினர்.

பெரிய கடைவீதி:— ஊர்வலம் 12-30 மணிக்கு பெரிய கடைவீதியை அடைந்தது. ஞாயிற்றுக்கிழமை கடையடைப்பாக இருந்தும் கடைவீதி பூராவும் மக்கள் சமுத்திரம்போல் காணப்பட்டனர். மாடிகளிலிருந்து பூமாரி பொழிந்தனர். திருச்சி நகரத்திலிருக்கும் எல்லா போட்டோ ஸ்டுடியோக்காரர்களும், மாணவர்களும், நூற்றுக்கணக்கான கேமிராக்களை வைத்துக்கொண்டு போட்டோ பிடித்தவண்ணமாக இருந்தனர். கழகச் செயலாளர் தோழர் பாண்டுரங்கன் விற்பனையாளர்கள் அனைவரையும் வரவேற்ருர். அப்போது, சின்னாளப்பட்டியிலிருந்து வந்த ஒரு நெசவுத்தொழிலாளி, அண்ணாவைக் கண்டதும், ஆவேசம் வந்தவர்போல தன் கையிலே இருக்கிற கைத்தறித் துணிகளை பத்து நாளாக முயன்றும் வாங்குவாரில்லை, எனவே. குடும்பத்துடன் பட்டினி இருக்கிறோம், என்று உருக்கமாக தன்னுடைய நிலையை விளக்கிச் சொன்னார். உடனே, அண்ணா அந்தத் துணிகளை விற்றுத் தர, கழகத் தோழர்களுக்குத் தெரிவித்தார்.

தாராநல்லூர்:-சரியாக 2 மணிக்கு ஊர்வலம் தாராநல்லூரை அடைந்தது. கழகச் செயலாளர் எஸ். சுப்பிரமண்யம் அனைவரையும் வரவேற்ருர்.

பிறகு, பீமநகர் செயலாளர் சண்முகம் அனைவரையும் வரவேற்ருர். நெசவாளர்களுக்கு கஞ்சி வார்க்கப்பட்டது.

தென்னூர்:—தென்னூர் தி. மு. கழகத் தோழர்களாலும், தி. க. தோழர்களாலும் அண்ணாவிற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

பகல் 4-30-மணிக்கு ஊர்வலம் புத்தூரை அடைந்தது. புத்தூர் பொதுமக்கள் எல்லோரையும் வரவேற்ருர்கள். நேரம் அதிகமாகிவிட்டதென சிலருக்கு துணி கொடுத்து விட்டு 5-30-மணிக்கு குறத்தெரு அடைந்தது. அங்கு பெண்களுக்கு மாத்திரம் சேலைகள் விற்கப்பட்டன.

உறையூர்:—அங்கிருந்து நெசவாளர் அதிகமாக வசிக்கும் பகுதியாகிய உறையூருக்கு ஊர்வலம் 6-மணிக்கு வந்தது. சுமார் 50,000 பொதுமக்கள் பகல் 1—மணியிலிருந்தே எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். கூட்டம் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், நேரம் அதிகமாக ஆகிவிட்டதாலும், துணி விற்கமுடியாத நிலையில் இருப்பதாலும் அனைவரையும் பொதுக் கூட்டத்திற்கு செல்லுமாறு கேட்டுக் கொண்டு தோழர் ஹனீபா நெசவாளர் பண்பாடினார், உறையூர் செயலாளர் தோழர் தங்கமுத்து அண்ணாவிற்கு மலர்மாலைசூட்டினார்.

மாலை ஊர்வலம்:— சரியாக 6-30 மணிக்கு திருச்சி வன்னிமரத்தடியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. தோழர் ஐ. எம். ஷரீப் குதிரைமீது அமர்ந்து ஊர்வலத்தை நடத்திச் சென்ருர். ஏராளமான நெசவுத் தொழிலாளர்களும், பீடித் தொழிலாளர்களும், பொதுமக்களும் அணிவகுத்துச் சென்றனர்.

பொதுக் கூட்டம்:- கூட்டத்தில் ஏராளமான பெண்களும், ஆண்களும் சுமார் 50000-க்கு மேல் கூடியிருந்தனர். மேடையை நமது இயக்கத் தோழரும், ஒலிபெருக்கி உரிமையாளருமான தோழர் எஸ். எ. ஜி. ராபி அலங்கரித்திருந்தார். தோழர் ஜி. சுப்பையா பி.ஏ.பி.எல். அவர்கள் தலைமையில் தோழர் ஹனீபா தனது குழுவினருடன் முக்கால் மணி நேரம் நெசவாளர் துயர்பற்றி பாடியபின், தோழர்கள் வில்லாளன் அ. பொன்னம்பலனார் பேசினர். பிறகு தோழர் எம். எஸ். மணியால் நெசவாளர் துயர் பற்றியும், பீடித் தொழிலாளர் நிலை பற்றியும்: 2-தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பிறகு அண்ணா பேச ஆரம்பித்தார். பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக திருச்சி மாவட்டத்திலுள்ள 45-கிளைக் கழகங்களின் சார்பிலும், திருச்சி பீடி, சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தாலும், சாயத் தொழிற்சங்கத்தாலும் பசைத் தொழிற்சங்கத்தாலும் அண்ணாவிற்கு மலர்மாலைகளும், கைத்தறி துண்டுகளும் அணிவிக்கப்பட்டன. அண்ணா பேசினார், 4-ம் தேதி மாத்திரம் சுமார் 5000 ரூபாய் கைத்தறி விற்கப்பட்டது. நிகழ்ச்சியில் முக்கியபங்குகொண்டு பணியாற்றிய தோழர்கள் எ. வி. கிருஷ்ணமூர்த்தி, சிவப்பிரகாசம் பி. ஏ., நடராசன், ராஜரத்தினம், ரத்தினம், ராமசாமி, முத்துகருப்பன், ராபி ஆகியோருடைய பணி பாராட்டத்தக்கது.

சென்னை

தி.மு.க.தலைமைகழகத்திலிருந்து மாபெரும் ஊர்வலமாக கைத்தறி வியாபாரம் துவங்கியது. அழகாக அலங்கரிக்கப்பட்டு—கொடிகள் பறக்கவிடப்பட்டு —நெசவாளரின் துயரை விளக்கும் படங்கள் தொங்கவிடப்பட்டு கம்பீரமாக நின்ற பெரிய 'வான்' ஒன்றிலே — கடை போல கைத்தறித் துணிகளை அடுக்கிக்கொண்டு வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். காரின் உச்சியிலே தோழர்கள் செல்லமுத்து, கரிக்கோல்ராஜ், சக்திவேல், பொன்னுசாமி ஆகிய தோழர்கள் அமர்ந்து கைத்தறி துணி வாங்குவீர்' என்ற பாட்டை மிக மிக உற்சாகமாகப் பாடியபடியே இருந்தனர். தோழர் மு. கருணாநிதி மெகபோனைவைத்துக்கொண்டு "கைத்தறித் துணிகளை வாங்குங்கள் நெசவாளர் கண்ணீரைத் துடையுங்கள்" என்ற ஒலி முழக்கம் செய்தவாறு வியாபாரத்தில் ஈடுபட்டார். தோழர்கள் கண்ணபிரான், கிருஷ்ணன், முனுசாமி, எ. எஸ் வேணு, செல்லக்கண்ணம்மா, மற்றும் திராவிட முன்னேற்றக் கழக செயல்வீரர்கள் பலரும் பங்கு கொண்டனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் பின்தொடர ராயபுரத்தில் புறப்பட்ட ஊர்வலம் வியாபாரம் செய்து கொண்டே தியாகராய கல்லூரி வரையிலே வந்து முடிவுற்றது. அங்கு கருணாநிதி சிறிது நேரம் பேசினர்.

இடைவேளைக்குப் பிறகு ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு, மீர்சாகிப்பேட்டை சென்று ஊர்வலமாக நகர்ந்து கொண்டே விற்பனை

(3-ம் பக்கம் பார்க்க)

### சிறையில் தீரர்கள்!

குன்றத்தூர் வழக்கில் ஒரு வாரம் காவல்தண்டனை பெற்ற கழக வீரர்கள் 14 பேரும் பூந்தமல்லி சிறையில் வாடுகிருர்கள். குண்டடி பட்டது போதாதென்று, காங்கிரசாட்சி இன்று சிறையிலும் வதைக்கிறது. ஐயோ அகிம்சையே! ஐயோ, ஆட்சியே!

# புயல் நிவாரண நிதி

இதுவரை

## ரூ. 11,887-15-11.

### நாசமடைந்தோர்—நலிவுற்ருேர் வாழ்வு பெற நன்கொடை உதவுங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புயல் நிவாரண உதவி நிதி — இதுவரை வசூல் விபரம்:—

| | | |
|---|---|---|
| தஞ்சைப் பொதுக்குழுவில் | — | 3499—0—0 |
| சென்னை நாடகங்களின் நன்கொடை மூல முப்-வசூல் மூலமும் செலவுபோக மீதி | | 7736—0—0 |
| புரசை—குறள்நெறிக் கழகம் | — | 200—0—0 |
| வியாசர்பாடி வள்ளுவர் கழகம் | — | 44—6—3 |
| சென்னை 10-வட்டக் கழகம் | — | 76—3—6 |
| இலட்சிய நடிக மன்றத்தார் (சென்னை) | — | 79—2—9 |
| சென்னை 30-வது வட்டக்கழகம் | — | 188—3—5 |
| மீர்சாகிப்பேட்டை வள்ளுவர் வாசகசாலை | | 20—0—0 |
| ராபர்ஸன்பேட்டை வள்ளுவர் மன்றம் | — | 10—0—0 |
| புஞ்சை புளியம்பட்டி தி. மு. க. | — | 30—0—0 |
| நடராஜ், இலக்குவன், காதர்மொய்தீன், மீரான்மொய்தீன் (சிந்துபூந்துறை) | — | 4—0—0 |
| கோவை வெங்கடாசலம் | — | 1—0—0 |
| ஆக மொத்தம் | | 11887—15—11. |

நிதி யனுப்பவேண்டிய முகவரி:—

மு கருணாநிதி,
தி. மு. க. புயல் நிவாரணநிதிக்குழு, செயலாளர்
6, வடக்கு கோபாலபுரம் முதல் தெரு,
ராயப்பேட்டை, சென்னை—6.

குறிப்பு :— நிதிக்குழுச் செயலாளரிடமிருந்து வரும் அறிக்கைகள்மட்டுமே 'திராவிடநாடு' இதழில் பிரசுரிக்கப்படும். ஆகவே நன்கொடை வழங்கும் தோழர்கள், தோழர் மு. கருணாநிதிக்கே விபரத்தையும் எழுதி அனுப்பவும். (ஆ—ர்.)

திராவிடநாடு

காஞ்சி] 11—1—53 [ஞாயிறு

# ஜனவரி 4

★

தம்பிமார்கள், தத்தமது வெற்றிப் பட்டியலை, மகிழ்ச்சியுடன் காட்டினர்—மகிழ்ந்தேன். மக்கள், இந்த நாளன்று, எவ்வளவு களிப்பும், புதிய நம்பிக்கையும் பெற்றனர் என்பதை, நான், திருச்சியில் கண்டேன். கண்டு, மக்களின் மனம் மேலும் உற்சாகம் பெறத்தக்க விதமான 'தொண்டு' புரியும், வாய்ப்பும் வலிவும் பெற்றாக வேண்டும், திராவிட முன்னேற்றக் கழகம், என்ற பாடம் கற்றேன்.

வீதிகளிலே விற்பனை, என்று திட்டம்—ஆனால், யாராலும் எல்லா வீதிகளுக்கும் செல்ல முடியவில்லை—நேரம் கிடைக்கவில்லை.

திருச்சியில், நான், நண்பர்கள் பொன்னம்பலனார், வில்லாளன், அனீபா, பராங்குசம், மணி, தர்மு, திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன் போன்றவர்களுடன் சென்றேன்—ஒரு 6 வீதிகளுக்குமட்டும்—அதுபோன்றேதான், மற்ற ஊர்களிலும் குறிப்பிட்ட சில தெருக்கள்மட்டுமே, போய்வந்தனர், மற்றவர்கள்.

சென்ற இடங்களிலும், மக்களின் தேவைகளை முழுவதும் கவனித்து விற்பனையைப் பெருக்க, முடியவில்லை. கேட்பவர்கள் ஏராளம்—பெற்றவர்கள் சிலர்மட்டுமே—அடுத்த இடம், அடுத்த இடம், என்று கூறியபடி, மேலால் செல்ல நேரிட்டது. ஒரு சிறுவன், இந்த நிலைமையை விளக்கினான், விம்மும் குரலில், நான் வெட்கப்படும்படி!

"என்ன அண்ணா! சிந்தாமணியில் கேட்டேன், மலைக்கோட்டை வா, என்றீர்கள், மலைக்கோட்டை வந்தேன், பெரிய கடை வீதிக்குப் புறப்பட்டுவிட்டீர்கள், இங்கேயும் தராமல், வேறு இடம் குறிக்கிறீர்களே! ஒரே ஒரு துண்டு, எட்டரை அணா துண்டு கொடுத்துவிடுங்கள்" என்று கேட்டான். ஆனால், அந்தத் துண்டு, தீர்ந்துவிட்டது!! பல ரகத் துணிகளைப் போதுமான அளவு எடுத்துச் செல்லவும் முடியவில்லை, ஒரு ரகம் செலவாகிவிட்டதும், மேலும் அதே ரகம் துணிகளைக் கொண்டுவந்து சேர்க்கவும் முடியவில்லை! முறையோ, புதிது! வியாபாரிகளோ, வாங்கி வாங்கிப் பழக்கப்பட்டவர்களே* தவிர, விற்பனை நடத்திப் பழக்கப்பட்டவர்களல்ல. கடையோ, மோட்டார் வான், ஓடிக்கொண்டே இருக்கவேண்டிய நிலை. இவ்வளவுக்கிடையே, விற்பனை! ஆனால், என்ன உற்சாகம்! எத்தனை விழிப்புணர்ச்சி!! மக்கள் காட்டிய ஆர்வம்தான் எப்படிப்பட்டது!! நாமல்லவா, அந்த ஆர்வத்தைக் காணும் வாய்ப்பை அடிக்கடி பெறத் தவறிவிடுகிறோம், என்று எண்ணினேன்.

"தம்பி! எட்டரை அணா துண்டு, இல்லை"

"சரி, பதினைந்தணாத் துண்டு, கொடு"

"அம்மா! வாடாமல்லி கலர்சேலை தீர்ந்துவிட்டது"

"அப்படியா! பாக்குக் கலர்சேலை ஒன்று கொடு"

"கரை போட்ட துண்டு ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது"

"சரி—அது ஒன்றும், கரை போடாத துண்டு ஒன்றும், தந்துவிடுங்கள்"

இவ்வண்ணம் உரையாடல்—பாதை ஓரத்தில் நின்றுகொண்டு கையைக் காட்டி, மோட்டார் வானை நிறுத்தி, துணிகளைக் கேட்டு வாங்கின நிகழ்ச்சிகள், உண்மையிலேயே நாட்டு மக்கள், கைத்தறி நெசவாளரின் துயர் துடைப்பது தங்கள் மேலான கடமை என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதாக அமைந்திருந்தன. திருச்சியில் நான் கண்டவைகளும், மற்ற ஊர்களில் சென்றிருந்த தோழர்கள் தந்த செய்திகளும், தி. மு. க. தயாரித்த ஜனவரி 4 திட்டம் மிக வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது, என்பதைமட்டுமல்ல, முயன்றால், இந்த வெற்றியின் தன்மையையும் அளவையும் பெரிதாக்கலாம், என்ற நம்பிக்கையையும் தருகிறது.

கைத்தறி நெசவாளர்களின் துயர் இன்று எல்லா ஊர்களிலும், நடமாடிக்கொண்டிருக்கும் திடீர்ப் பிச்சைக்காரர்கள் உருவிலே, தேய்ந்துபோன கட்டழகர்கள், மாய்ந்துபோகும் நிலையில் உள்ள தாய்மார்கள், எலும்புந் தோலுமாகிவிட்ட சிறுவர்கள், துவண்டு தவிக்கும் குழந்தைகள், உருவிலே, தெரிகின்றன—பொதுமக்கள், பிரச்சினை பயமூட்டக்கூடிய அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது என்பதை உணர்ந்துள்ளனர்—எனவேதான், கைத்தறியாளர் ஆதரவு நாளன்று, தாமும் தம்மாலான கடமையைச் செய்யத் தவறக்கூடாது, என்பதிலே அந்த அளவு அக்கரை காட்டினர்.

மிகச் சாமான்யர்களே, இந்த அக்கரையை அதிகமான அளவிலே காட்டினர்.

'பெரியபுள்ளி'கள் என்று சமுகத்திலே குறிக்கப்படுபவர், ஒருவரைக்கூட, திருச்சி நிகழ்ச்சியில, நான் சந்திக்கவில்லை — அவர்கள், மாளிகைகளிலே, வேடிக்கையாக ஒருவேளை பேசிக்கொண்டிருந்திருக்கக்கூடும், "என்ன! இதுகள் இப்ப, துணி விற்குதுகளாமே!!' என்று. கண்ணீருக்கு அஞ்சாத கண்ணியர்கள் அவர்கள்! இருக்கட்டும்—சமுக அமைப்பு, நீதி முறையின்படி பிரித்துப் புதுப்பிக்கப்படும் வரையில்!

மற்றவர்கள் காட்டிய மட்டிலா ஆர்வத்துக்கு, என் மனமார்ந்த நன்றி.

உழைத்த தோழர்கள், உற்சாகமூட்டிய நண்பர்கள், என் உள்ளத்தில் புதியதோர் மகிழ்ச்சி எழச் செய்தனர். என் நன்றி, அவர்களுக்கெல்லாம்.

தகுந்த ஏற்பாடுகளுடன் சென்றிருந்தால், ஆங்காங்கு சிறு அளவிலேனும் கடைகள்போல் அமைத்திருந்தால், பல ஆயிரம் ரூபாய்களுக்கு விற்பனை ஆகியிருக்கும்.

ஜனவரி 4ந் தேதி திட்டம் பொதுமக்களுக்குக் கைத்தறி நெசவாளர்கள் படும் துயரை விளக்கவும், அன்னிய ஆடைகளை மக்கள் வாங்குவதால், தாயகம் தேய்ந்து வரும் கொடுமையை எடுத்துரைக்கவும், திராவிட முன்னேற்றக் கழகம் அந்தச் சங்கடமும் சிக்கலும் நிறைந்த பிரச்னையைத் தன் முக்கியப் பிரச்னையாகக் கொண்டிருக்கிறது என்பதை விளக்கவும், அமைந்தது. விற்பனையின் அளவைவிட, பொது மக்களிடம் புதிய ஆர்வத்தை மலரச் செய்வதே முக்கியமான நோக்கம். ஜனவரி நாலாம் தேதி துவக்க நாள்! பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் விழா! பொதுமக்களைத் திரட்டி, கைத்தறியாளர் துயர் தீர்க்கச்சொல்லி எடுத்துரைக்கும், தனிமாநாடு!! இந்த நோக்கம் நேர்த்தியான முறையிலும் பெருமை தரத்தக்க அளவிலும் நிறைவேறி இருக்கிறது; மகிழ்ச்சி, இந்த வெற்றியைத் தேடித்தந்த எல்லாத்தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிடம், வடநாட்டினிடம் சிக்கிக்கிடக்கிறது—சீரழிகிறது—சித்திரவதைக்கு ஆளான நிலையில் செந்தமிழ் நாட்டுக் கைத்தறியாளர் இருப்பது, இந்தப்பயங்கர உண்மையை எடுத்துக்காட்டும், சிகப்புப் புள்ளி!

ஆபத்து சூழ்ந்து கொண்டிருக்கிறது — திராவிடம் அடிமைத் தளைகளால் கட்டுண்டு தத்தளிக்கிறது—விடுதலை கிடைத்தாலொழிய மக்களுக்கு வாழ்வு இல்லை, என்ற கோரமான உண்மை தெரிகிறது.

எனவே, நாட்டுப்பற்று, நாட்டுப் பொருளை உபயோகிப்பது நமது கடமை என்ற உறுதி, தாயகத்தின் தளைகளை உடைத்தெறிந்தாக வேண்டும் என்ற எழுச்சி கொந்தளிக்க வேண்டும்,

ஜனவரி 4-ல், தமிழகத்தில் பல பகுதிகளில் இந்தக் கொந்தளிப்பு ஒன்றாக — எதிர் வரிசையினரும் உணர்ந்து கொள்ளும் அளவுக்குத் தெரிந்தது

ஜனவரி 4—துவக்க நாள், என்றேன்—திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆர்வத்தை, ஆதரவை, நாட்டுப்பற்றைத் தொடர்ந்து, காட்டும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறது.

தி. மு. க. தோழர்கள், வாய்ப்பு கிடைக்கிற போதெல்லாம், ஜனவரி 4 என்று கருதிக்கொண்டு பணியாற்றவேண்டும்.

வாய்ப்புகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

இனிச்செய்ய வேண்டிய பெரும் பணிக்கு, முன் அறிவிப்பு என்றே ஜனவரி 4-ந் தேதிய திட்டத்தைக் கொள்ள வேண்டும். ஜனவரி 4, தந்த உற்சாகத்தைத் துணைகொண்டு, தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

பொதுமக்களும், குறிப்பாக, கைத்தறி நெசவாளர்களும், தி. மு. கழகத்திடம், பெரும் அளவுக்குத் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர்—மகிழ்ச்சிக்குரியது தான் — ஆனால் இது புதியதோர் பொறுப்பு என்பதை உணர வேண்டும்—நமது பணியின் தரமும் அளவும் உயர வேண்டும் — உயர்ந்த வண்ணம் இருக்க வேண்டும்—தாயக விடுதலைக்கு நாம் பொறுப்பாளர்கள் என்ற எண்ணத்துடன் நாம் பணியாற்ற வேண்டும். அதற்கு உற்சாகமூட்டும் நாளாக ஜனவரி 4, அமை[...]தது.

நம்மிடம், பொதுமக்கள், அ[...]லும் குறிப்பாக, கைத்தறியாளர்க[...] எவ்வளவு எதிர்பார்க்கிறார்கள், எ[...]பதை எடுத்துக் காட்டும் நிகழ்[...] ஒன்று கண்டேன் — கண்ணீ[...] என்னால் அடக்க முடியவே இல்[...]

மலைக்கோட்டை அருகே து[...]களை விற்பனை செய்து கொண்[...]ருந்தோம்.

தோழர் அனிபாவின் இ[...] முரசு!

உடுமலை நாராயணக் கவி[...] உயர்தரமான பாடலிலே மக்க[...] ஈடுபட்டிருந்தனர்.

திடீரென்று, அந்தக் கூட்டத்[...]லிருந்து, ஐம்பதாண்டுள்ள ஒருவ[...] வறுமையால் தாக்கப்பட்டவ[...] கைத்தறி நெசவாளர், சின்னள[...] பட்டியைச் சார்ந்தவர், உணர்ச்[...] வசமாகி, தன் தலையில் இருந்[...] கைத்தறித்துணி மூட்டையை[...] கீழே இறக்கி வைத்துவிட்டு, அ[...]யற்ற தருவென என் முன் வீழ்[...]தார்—கண்ணீர் பெருகிற்று—[...] கைத்தறியாளரைக் காப்பாற்று[...]கள்—காப்பாற்றுங்கள், என்று க[...]றினார்.

விற்பனைக்காகப் பல வீதிக[...] சென்ற போதும், பொதுக்கூ[...]டத்தை முடித்துக் கொண்டு வீ[...] திரும்பும் போதும், நான் ஒரு நடு[...]தர வயதுடைய தோழர் ஒருவரி[...] முழக்கத்தைக் கேட்டேன். எ[...] கண்ணெதிரே அந்த உருவம்இதோ[...] தெரிகிறது. அந்த முழக்கம் எ[...] செவியில் ஒலித்தபடி இருக்கிறது[...]

கைத்தறியாளரை
காப்பாற்றுங்கள்
வடநாட்டு ஆதிக்கத்தை
ஒழித்துக் கட்டுங்கள்

என்பதுதான் அந்த முழக்க[...] அவர் தி. மு. க. அல்ல; விழிப்[...]ணர்ச்சியும் வீர உணர்ச்சியு[...] கொண்ட விடுதலை வீரர் — அத்[...] கையவர்களை அணிவகுப்பிலே[...] கொண்டுவந்து சேர்க்க, துவக்[...] நாள், ஜனவரி 4, அன்று நா[...] கண்ட வெற்றி, நாம் பெற வேண்[...]டிய பெரிய வெற்றியை நமக்கு நி[...]னூட்டும் விதமாக அமைந்த[...] கண்டு மகிழ்கிறேன் — வெற்[...] தேடித் தந்தவர்களைப் பாராட்[...]கிறேன்—நன்றி கூறிக் கொள்[...]றேன்.

அண்ணாதுரை

★

# இன்பம் பொங்குக!

அன்புடையீர்! வணக்கம்.

பொங்கற் புது நாள் வருகிறது. இன்பம் தங்கள் இல்லத்தில் பொங்கி வழிய விழைகிறேன்.

தமிழகத்திலே, இன்று பல இலட்சம் கைத்தறி நேசவாளர்கள். வேலையின்றி வேதனைப் படுகிறார்கள். பட்டினியால் பரதவிக்கிறார்கள் பாதையிலே பிணமாக விழுகிறார்கள் பிச்சை எடுக்கிறார்கள். ஊரூராய் குழந்தைகளை விற்கிறார்கள்!

இந்தக் கோடுமை வேளியே! நமது வீடுகளிலே இன்பப் பொங்கல்!

பொங்கற் புதுநாள் தரும் இன்பம் உண்மையானதாக இருக்க வேண்டுமானால், நம் வீடுகளிலே பால் பொங்கினால் மட்டும் போதாது. நேசவாளர் நெஞ்சிலே சிறிதளவாவது மகிழ்ச்சி பொங்கவேண்டும்.

நேசவாளர் கண்ணீர் பொங்கினால், நம் வீட்டுப் பாற்பொங்கல், இன்பம் அளிக்காது.

எனவே இலட்சக்கணக்கான கைத்தறி நேசவாளர்களின் துயர் துடைக்க, பொங்கற் புதுநாளில், மறவாமல், கைத்தறி ஆடைகளை[...] வாங்கி உபயோகியுங்கள்.

பாலும் பாகும் பருப்பும் கலந்[...] பொங்கலை அன்புடன் தரும் மங்[...]யர் உடலில் வடநாட்டு ஆலைச்சே[...] இருந்தால், அந்தப் போங்கல் இனி[...]பளிக்காது—நஞ்சு ஆகும்.

பொங்கற் புதுநாளில், வடநா[...] ஆலைச்சேலையோ, துணியோ, வா[...]னால், தமிழ் நாட்டில் பத்து கை[...]தறி நெசவாளர்களைப் பட்டி[...] போட்டுக்கொன்ற குற்றம் புரிந்தவ[...]வோம்.

அன்னியத்துணிகளை வாங்கா[...]
ஆலைத்துணிகளை வாங்காதீர்!
கைத்தறியாளரைச்சாகடிக்கா[...]
இன்பம் பெறும் திருநாள[...]

நேசவாளர் வாழ வழி செய்யுங்க[...] கைத்தறி ஆடைகளையே வாங்[...]கள்—எல்லோரும் இன்புற்றிருக்[...] செய்யுங்கள். வாழிய நீவிர்! வாழ[...] வாழியவே!

அன்பன்,
அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்,
திராவிட முன்னேற்றக்கழ[...]

# பல்லாயிரக்கணக்கில் கைத்தறித் துணி விற்பனை

## நெசவுத் துணி ஆதரவுப் பிரச்சாரம்: அருமையான வெற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தவாறு கோமலாபுரம் வந்தனர்.

என். எஸ். கிருஷ்ணன்

ஊர்வலத்தினரை கலைவாணர் என். எஸ். கே. மதுரம் அம்மையாரும் வரவேற்று கருணாநிதிக்கு மாலை அணிவித்து, சுமார் நானூறு ரூபாய்க்கு துணிகள்வாங்கினார்கள். பின்னர் லாயிட்ஸ் ரோடு வழியாக வியாபாரம் செய்து கொண்டு மைலாப்பூர் சென்றார்கள்.

எம். ஜி. ஆர். வரவேற்பு

வழியில் தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் தோழர்களை வரவேற்று 250-ரூபாய்க்கு கைத்தறி துணிகளை வாங்கிக்கொண்டார்.

மைலையில் மாபெரும் ஊர்வலம்

மாலை 4-மணிக்கு மைலாப்பூரில் வியாபார ஊர்வலம் துவங்கியது. ஏராளமான மக்கள் முழக்கம் செய்தவாறு துணி வாங்கும்முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபட்டார்கள்.

சூளை—புரசைவாக்கம்—

பெரம்பூர்பாரக்ஸ்.

பாரகன் தியேட்டர் வழியே மௌண்ட் ரோட்டில் வியாபாரம் செய்து கொண்டு, சூளை, புரசவாக்கம், பெரம்பூர் வரையிலே சென்று ஊர்வலம் முடிவுற்றது.

பொதுக்கூட்டம்

பெரம்பூரில் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த மிகப் பெருங்கூட்டத்திற்கு தோழர் கண்ணபிரான் தலைமை வகித்தார். தோழர் மு. கருணாநிதி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

கருணாநிதி குழுவினரின் விற்பனைத் தொகை ரூ 5000-மட்டுமல்ல, ஆங்காங்கும் நமது கிளைக் கழகத் தோழர்கள் தனித்தனியே ஜன—4 ஆதரவு நாளை நடத்தினர். அவர்கள் விற்பனை செய்த விபரம்:- பெத்துநாய்க்கன்பேட்டை ரூ 500; சிந்தாதிரிபேட்டை ரூ. 300; 9-வது வட்டம் ரூ. 300; 14-வது வட்டம் ரூ. 250; மௌண்ட்ரோடு ரூ, 200; நுங்கம்பாக்கம் ரூ. 500; ஆகமொத்தம் 7050-க்கு ஏழைத் தறியாளரின் துணிகள் விற்பனையாயின.

தூத்துக்குடி

தோழர் என். வீ. நடராசன் தலைமையில் கைத்தறித் துணி விற்பனை நடைபெற்றது. நகரின் முக்கிய தெருக்களின் வழிபாக கைத்தறித் துணிகள் வாங்குவீர்' என்ற பாடலைப் பாடிக்கொண்டு ஊர்வலமாகச் சென்று 1025 ரூபாய்க்கு விற்பனை செய்தனர். உள்ளூர் நகரக்கமிட்டி எஸ். நடராசனும் மற்றும் கழக வீரர்களும் பணியில் தீவிர பங்கு கொண்டனர். வழிநெடுக மலர்மாலைகள் சூட்டப்பெற்று ஆங்காங்கே கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன. மாலை 6மணிக்கு நகரக்கமிட்டி செயலாளர் எஸ். நடராசன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம்நடைபெற்றது. தலைவர் பேசியபின் தாளமுத்து மற்றும் பலர் பேசினர். கடைசியாக தோழர் என். வி. என். நெசவாளர் பிரச்னைபற்றியும், தற்கால அரசியல் நிலை குறித்தும் விளக்கிப் பேசினார்.

மதுரையில்

ஜன 4-ம் நாள் தோழர்கள்: சி. பி. சிற்றரசு, திருச்சி அழகுமுத்து, பால்ராசு, ராசமான், முத்து, மாணிக்கம் மற்றும் இயக்க முன்னணி வீரர்களும், நகரின் பலவீதிகளில் கைத்தறித் துணியை இயக்க கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட மூன்று கைவண்டிகளில் வைத்து விற்பனை செய்தார்கள். ரூபாய் இரண்டாயிரத்துக்குமேல் விற்பனை செப்யப்பட்டது. அன்று மாலை நகர் திலகர் திடலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் திருச்சி தோழர் அழகமுத்துதலைமையில் நடைபெற்றது. கைத்தறித்துணி வாங்கவேண்டியதின் அவசியத்தை விளக்கி தோழர்கள் சி. பி. சிற்றரசு, நடராசன், பால்ராசு, முத்து ஆகியோர் விரிவுரையாற்றினார்கள்.

சேலம்

சேலத்தின் பல பாகங்களிலும் தோழர் கே. ஏ. மதியழகன், ஜி. பி. சோமசுந்தரம், கோபிராசு, ப. கண்ணன், ஆகியோர் கைத்தறித் துணிகளை விற்பனை செய்தனர். மோட்டார் வானில் துணிகளை அடுக்கி காலை 9-மணிக்கு அரிசிப்பாளையத்தில் தோழர் மதியழகனும் மற்றவர்களும் விற்பனையைத் தொடங்கி பிறகு பல இடங்கள் சென்றனர். ஒவ்வொரு இடத்தில் ஏராளமானவர் கைத்தறியை விரும்பியதால் குறிப்பிட்டகாலத்தில் போகமுடியவில்லை. மாலை 6மணி ஆகிவிட்டதால் குகைபோன்ற இடங்கள் ரத்துசெய்யப்பட்டன. மொத்தம் ரூ 2010க்கு விற்பனை நடைபெற்றது. மாலை விக்டோரியா மார்க்கட்டு மைதானத்தில் கவுன்சிலர் பி. கே. வரதராஜுலு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், கோபிராஜு, ப. கண்ணன், ஜி. பி. சோமசுந்தரம் கே. ஏ. நடராசன், ஆகியோர் பேசினர். கூட்டத்தில் இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்டவர் குழுமியிருந்தனர். விற்பனையை நகர கிளை செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் மற்றும் வீரபத்ரையா, பத்மனபன், நடராசன், கோபால் ஆகியோர் நல்லமுறையில் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்திவைத்தனர்.

கோவை: நகரக்கழக கட்டடத்திலிருந்து, கோவை மாவட்டச் செயலாளர் ஈ வி. கே. சம்பத் தலைமையின்கீழ் ஓர் மாபெரும் ஊர்வலம் முக்கிய நகர வீதிகளின் வழியாகச் சென்று டவுன்ஹாலை அடைந்தது. அங்கு தோழர் சம்பத் கைத்தறித் துணிகளை வாங்கவேண்டிய அவசியத்தை விளக்கி ஒரு சிறிய சொற்பொழிவை ஆற்றினார். பிறகு, ஊர்வலத்தில் கலந்துகொண்ட தோழர்கள் அனைவருக்கும் நன்றிகூறி, வியாபாரத்தைத் தொடங்கிவைத்தார். இரவு சுமார் 8 மணி வரையிலும் வியாபாரம் நாம் எதிர்பார்க்காத அளவிற்குமேல் வெற்றிகரமாக நடந்தது. ரூ. 4506—11—0க்கு சாக்குகள் விற்பனையாயிற்று.

அன்று மாலை சுமார் 7-மணியளவில் கோவை சிதம்பரம் பூங்காவில் கோவை செழியன் கூட்டத்தின் முக்யத்வத்தை விளக்க, கோவை நகர செயலாளர் தோழர் பழனிசாமியின் தலைமையில் கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார். தலைவர் முன்னுரைக்குப் பிறகு நகர துணை செயலாளர் சு. ஆறுமுகம் சிறிது நேரம் பேசினார். அதன் பிறகு, தோழர் இ. வி. கே. சம்பத் சொற்பொழிவாற்றினார். நெசவாளர்களின் பரிதாபகரமான வாழ்க்கையையும், அவர்களின் துயரத்தைத் துடைத்தற்குரிய வழி வகைகளைப் பற்றி மிக விரிவாகப் பேசினார். மற்றும் கோவை கலெக்டர் நடந்துகொண்ட ஜனநாயக முறையற்ற போக்கினையும் கண்டித்து, பேசினர்

ஈரோடு:- எஸ். ஆர். எஸ். மண்டியிலிருந்து சென்னை நகரத்தோழியர் எஸ். சத்தியவாணிமுத்து தலைமையில் நகர் முழுவதும் வீதிவீதியாக கே. டி. குப்புசாமியும், தொண்டர்களும் கைத்தறி துணிகளை விற்பனை செய்வதில் மிக ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். மாலை நிகழ்ச்சியில் நாஞ்சில்நாடு கி. மனோகரன் கலந்துகொண்டார். ரூ.2000 பெறுவான கைத்தறித் துணி விற்பனையாயிற்று.

மாலை காரை வாய்க்கால் மைதானத்தில் எஸ். ஆர். சந்தானம் தலைமையில் இரா. பெருமாள், எஸ். அப்பாவு, நாஞ்சில்நாடு கி. மனோகரன், தோழியர் சத்தியவாணி முத்து பேசினார்கள். இ. ஏ. மதார்சா நன்றிகூற கூட்டம் முடிந்தது.

காஞ்சி: நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி தலைமையில் சி.டி.டி. அரசு, சி. வி. எம். அண்ணமலை, ஈழத்தடிகள், செ. கோ. பெருமாள் ஆகியோர் தெய்வசிகாமணி எம். எல். ஏ. வுடன் அண்ணா வீட்டிலிருந்து புறப்பட்டு விற்பனையிலீடுபட்டார்கள். பல வீதிகளின் வழியாகவும் சென்று விற்றனர். ஆங்காங்கு கே. ஆர். ஆர். பாடினார். சுமார் ரூ. 2800 விற்பனை.

மாலைப் பொதுக்கூட்டம் தெய்வசிகாமணி எம். எல். ஏ. தலைமையில் சி. வி. எம். அண்ணமலை, சி. டி. டி. அரசு, கே. ஆர். ராமசாமி ஆகியோர் பேசினர்.

சிதம்பரம்: அரங்கண்ணல் தலைமையில் கே. டி. எஸ். மணி, ஆர். பாலகுருசாமி, சி.எஸ். சடகோபன், இரா. சக்கிரவர்த்தி, பொ. சொக்கலிங்கம், பழனி, நடேசன், கலியமூர்த்தி, தியாகராசன், சுப்பிரமணியன், ஏ. குமாரசாமி, ஆர். பழனிசாமி, ஆர். கிருஷ்ணமூர்த்தி, வேணுகோபால், சிவபெருமான், சௌரிராசன், கண்ணன், புவனகிரி கோவிந்தன், குஞ்சு, பழனியப்பா, துரைராஜன், இராமகிருஷ்ணன், நஞ்சு, பழமலை, தங்கவேலு, சாலியந்தோப்பு சுப்பையா ஆகியோர் விற்பனை செய்தனர்.

ஆங்காங்கு கெம்பு ஸ்டுடியோக்காரர் புகைப்படம் எடுத்தார்.

ரூ. 1450 க்கு விற்பனை-பார்ப்பனத் தோழர்களும் முன் வந்து ஆதரவு அளித்தனர்.

மாலையில் பொதுக்கூட்டம் பாலகுருசாமி தலைமையில் கே. டி. எஸ். மணி, அரங்கண்ணல் பேசினர்.

நெல்லிக்குப்பம்: இரா. இளம்வழுதி எம். ஏ. பி. எல். தலைமையில் புருடோத்தமன், சிவானந்த சங்கரன், சம்பந்தம், தம்பையா, இரா. மதியழகன், மு. சுப்ரமணியம், கண்ணன், த. சுப்ரமணியம், கோவிந்தசாமி, ரகீம், வேணு, துரை, அப்பாஜி, தங்கராசு, வைத்திலிங்கம், சனார்த்தனம், வெங்கிடேசன் முதலியோர். ரூ. 2010-14-6 க்கு விற்பனை.

மாலை எஸ். ராதாகிருஷ்ணன் எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இரா. இளம்வழுதியும் பிறரும் பேசினர்.

டி. சி. வேணு, சுகுண சங்கரன், அ. வெங்கடபதி, சி. இளவழகன், ச. இராசகோபால், தேவதூதன், சோழன், சந்தர், தண்டபாணி ஒத்துழைத்தனர்.

சித்தையங்கோட்டை:

வி. தியாகராசன் தலைமையில் என். பி. நாச்சியப்பன், காசிம், ஆண்டவர், முத்து, காமராசன், காசிநாதன், சாகுல் அமீது, அப்துல்காதர், அ. வெங்கடாசலம், காதர்சாகிப், எம். எ. சாகுல்அமீது ஆகியோர். ரூ. 250-க்கு விற்பனை.

மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இராசபாளையம்:

தோழர் மாசாணம் பாடிவர, கழகத் தோழர்கள் விற்பனை செய்தனர். ரூ. 354—6—0-க்கு

சேலூர்:

கே. நடேசன் தலைமையில் எம். பி. முருகேசன், சாரங்கபாணி, எஸ். இராமன், சோலை, செபராமன், எஸ். டி. முருகேசன் ஆகியோர். ரூ 180—6—0 க்கு.

சென்னிமலை:

கழகத் தோழர்கள் விற்பனை செய்தனர். ரூ. 544—10—0

சாத்தூர்:

ஜி இராசதுரை தலைமையில் மா. நடராசன், செயலாளர் சண்முகநாதன், சி. என். பொன்னையா, முனியப்பன், ஆர். எம். முனியப்பன், முருகையா, சந்தரப்பன், ராமர், சுப்ரமண்யன் ஆகியோர். காங்கிரஸ் தோழர் எஸ். பி. சுந்தரராஜுவும் ஒத்துழைத்தார். ரூ. 350 விற்பனை.

அரியலூர்:

எம். ஆர். செல்லப்பா தலைமையில் மாசிமுத்து, மருதமுத்து, சின்னையன், முனிசாமி, எதிராஜு, மணி, ஆகியோர்.

அம்மையப்பன்:

கழகத் தோழர்கள் விற்பனை செய்தனர். ரூ 281—11—9

சின்னாளப்பட்டி:

செயலாளர் சவுடய்யா, சேதுபதி, நாச்சியப்பன், ராமசாமி, தாசன், சதாசிவம், காமாட்சி ஆகியோர். ரூ. 363—0—3.

மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி:

செயலாளர் பகதூர் தலைமையில் கமிட்டி உறுப்பினர்கள் விற்பனை செய்தனர். ரூ. 289—2—0

அரூர்

எச் எல். முருகேசன், குசலன், பாசுராமன், வேதகிரி, கோவிந்தசாமி, சாபாரியன், கோவிந்தன் முதலியோர் விற்பனை செய்தனர். ஜகாங்கீர், கண்ணபிரான், பாடினர். ரூ. 300—0—0

திசையன்விளை:

என். இராமசுந்தரம் தலைமையில் எஸ். செலலைபா, முத்து, சுப்பையா, ஆகியோர்.

அபிராமம்:

திராவிடதாசன், குருநாத், பாட்சரன், வள்ளிநாயகம், அரிகிருட்டினன், ராமசாமி, ஆகியோர். ரூ. 200

களம்பூர்:

எஸ். எம். அண்ணமலை தலைமையில் கே. என். சிவநேசம், சின்னக்கண்ணு, துரைசாமி, அப்புலு, இராமச்சந்திரன், ரங்கநாதன் ஆகியோர். ரூ 95—5—0 க்கு விற்பனை.

குரவப்புலம்:

பி. எஸ். நடேசன், எஸ். கி. இராமாமிர்தம், பி. முருகையன், துரை. இளம்வழுதி ஆகியோர்.

பள்ளிக்கொண்டான்:

ரத்தினம், அரங்கநாதன், விசுவநாதன், சந்திரன், கிருட்டினன் (கம்—அனுதாபி) ஆகியோர். ரூ. 80—0—0

மாலையில் பொதுக்கூட்டம்.

குன்னத்தூர் (கோவை):
கழகத்தோழர்கள் விற்பனையிலீடுபட்டனர். ரூ. 196—10—3

செங்கற்பட்டு:
செயலாளர் கே. நவநீதநாதம் தலைமையில் விற்பனை. ரூ. 986-13-6

வளவனூர் (குமாரகுப்பம்):
இராம. பழனிச்சாமி தலைமையில் சுப்ரமணியம் பாட. விற்பனை செய்யப்பட்டது. ரூ. 353—10—6-க்கு

நாகப்பட்டினம்:
செயலாளர் கே. பாப்பையன் தலைமையில் திருப்பதிசாமி, வில்சன், ராஜகோபால், மகாலிங்கம், மருதையன், பழனியாண்டி, ராஜாங்கம், கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜ், ஆகியோர். ரூ 518-11-6-க்கு

மாயவரம்:
ஆர். பழனிச்சாமி தலைமையில் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார், அருண்மொழி, பூங்கோதை, ஆர். ராமானுசம் எம். சி., கிட்டப்பா, வி. சங்கையன், டி. காசிநாதன், ஆர். ஜோசப், வை. மாணிக்கம், பாண்டியன், சௌந்தரராசன், அருணாசலம், குருமூர்த்தி, பி. டி. ராஜன், செல்வராஜு, மீனாட்சி செங்குட்டுவன், பி.எஸ்.இளங்கோ, பண்டரிநாதன், ஆறுமுகம், சந்தானம், ஜெயராமன், கங்காதரன்—முதலியோர். ரூ. 809—14—14—3

மாலை பொதுக்கூட்டத்தில் இராமாமிர்தத்தம்மையார் தலைமையில் பூங்கோதை, அருண்மொழி, ஆர். பழனிச்சாமி, செங்குட்டுவன் பேசினர்.

நாமக்கல்: என். பி. செல்லப்பன் தலைமையில் இரா. பெருமாள், நா. செம்பு, சின்னையன், சிவஞானம், அங்கமுத்து, பத்மராஜு, ஆகியோர்.
ரூ 390.
மாலை பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கடையநல்லூர்: ப. புகழேந்தி, இரா. பழனிச்சாமி, சாகுல் அமீது, சி. நடராசன், கந்தசாமி, செல்லையா அன்பரசு, சுல்தான், ஆகியோர்.
ரூ 196-8-6

பெரியகுளம்: கே. எம். எம். மேத்தா தலைமையில் தோழர்கள் விற்றனர்.
ரூ 542-7-0

திருவள்ளூர்: ஜி. எஸ். பாலசுந்திரம் டி. ஏ. வரதன், சுந்தரராஜ், சாமி, சந்திரன், மதனன் ஆகியோர்.
ரூ 601-11-0

கல்லிடைக்குறிச்சி: பாவாமைதீன், ஜப்பார், ரகுமான் ஆகியோர் பாடிக்கொண்டுவர, கே. எஸ். சுப்ரமணியம், ரெங்கசாமி, ந, மூக்கன், சங்கரன், ஆறுமுகம் சேக்மீரான் விற்பனை செய்தனர்.
ரூ 599-7-0

அறந்தாங்கி: இராம. அசோகன், இராசகோபாலன் ஆகியோர்.
ரூ 238-15-0

சோழவந்தான்: செல்லத்துரை தலைமையில் ஆவடையப்பன், காளியப்பன், பணி, குருசாமி, செல்லச்சாமி, கார்மேகம், நடராசன், சுந்தரம் ஆகியோர்.

முக்கூடல்: சு. கலிங்கன், முத்துக்குட்டி, செந்திவேல், இராமசாமி, தேவன், சங்கரலிங்கம் ஆகியோர்.
ரூ 450
மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பழனி: கா. வெங்கடாசலம், தியாகராசன் ஆகியோர்.
ரூ 293-15-0
மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பல்லாவரம்: பல்லாவரம், ஆனகாபுத்தூர் ஆகிய இடங்களில்.
ரூ 404-2-6

பேராவூரணி: பி. வடிவேல், கணேசன், தங்கராசு, கருப்பையா, இராமையன் ஆகியோர்.
ரூ 200

கடம்பூர்: எம். எஸ். பி. சாமி தலைமையில் பொன்னுச்சாமி, சின்னமணி ஆகியோர்.
ரூ 158-15-6

ஆற்காடு:— ஆற்காடு—விளாப்பாக்கம் தி. மு. க. தோழர்கள் ரூ. 691—4—6 விற்பனை செய்தனர்.

பென்னாத்தூர்:— பி. என். அனுமந்தன், அண்ணாமலை, இரணியன் ஆகியோர் ரூ. 30—0—0 மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதங்குடி:— ஆர். செல்வமணி, ஞானசம்பந்தம், முத்து, ஆஜா, கணேசன், பாலசுப்பிரமணியம், அமிர்தலிங்கம், தங்கராசு, நடராசன் ஜமால்மைதீன், பாலராஜு ஆகியோர் ரூ. 100

கமுதி:— சௌந்திரபாண்டியன் தலைமையில் ரூ. 275

முத்துப்பேட்டை:— டாக்டர். சிவசங்கரன் தலைமையில் தருமலிங்கம், கணபதி, ராமனுதன், நடராசன், நாசரெத்தினம், கோவிந்தன், கந்தசாமி, மருது, பாலசுப்பிரமணியன், பஞ்சாயத்துபோர்டு உறுப்பினர்கள் சோமசுந்தரம், ராமையா, ஆகியோர் ரூ. 562—11—0

விழுப்புரம்:— வி. கே. பாசல்கான் எம்.சி, எஸ். ஏ. ரஹீம், க. மு. உசேன், முத்துராமன், சுந்தரம், ஆ. சண்முகம், சிவபெருமான். உமாபதி, ராமதாஸ், அம்பலவாணன் ஆகியோர் ரூ. 439—4—6

திண்டுக்கல்:— எஸ். வி. தொந்தி, எம். அய்யாச்சாமி, தலைமையில் விக்ரமாதித்தராசன், சமதர்மம், முத்துவீரராகவன், தாண்டவம், ராஜு, கிருட்டிணசாமி, நரசிங்கம் ஆகியோர் ரூ 200 மாலையில் பொதுக்கூட்டம் நடந்தது.

சின்னசேலம்:— கழகத் தோழர்கள் விற்பனை செய்தனர் ரூ. 262—10—9

துறையூர்:— கழகத் தோழர்கள் விற்பனை செய்தனர். ரூ. 543—12—0

வடுகபட்டி: கழகத் தோழர்கள் விற்பனை செய்தனர் ரூ. 150-2-3

திருநெல்வேலி: சந்திப்பில் தோழர் திருப்பாற்கடல் தலைமையில் சங்கரலிங்கம், பரிதிமால், பெரியசாமி, நாராயணன், ராஜு, ஆகியோர் ரூ. 292—5—9

திருவையாறு: துளைகவையாபுரி, ஆர். எஸ். மணி, இராசம் அம்மை ஆகியோர் ரூ. 735—3—9 போலீசார் அனுமதி மறுத்ததில் கூட்டம் நடைபெறவில்லை.

அருப்புக்கோட்டை:— தியாகராய வாலிபர்சங்கத்திலிருந்து புறப்பட்டு ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தலைமையில் ச. சு. முத்துசாமி, மீ. பெரியசாமி, சு. நடராஜன், சு.காளிமுத்து சி. குமாரவேல் ஆகியவர்களும், மற்றும் கழகத் தோழர்களும் கைத்தறி துணிகளை விலைகூறி விற்றனர். இரவு 7மணிக்கு தியாகராய வாலிபர் சங்கத்திற்கு முன்பு மீ. பெரியசாமி தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் சு. காளிமுத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

(முடிவு பெறவில்லை)

இந்த ஆண்டு
'திராவிட நாடு'
**பொங்கல் மலர்**
*
அருமையான விருந்து!
*
பொங்கலன்று கிடைக்கும்
விலை ரூ 1.

## போலீஸார் அறப் போர்

சென்னைப் போலீஸ் தோழர்கள், தங்களது அறப்போர் மூலம், ஆச்சாரியாரின் கவனத்தைத் தம்பக்கம் திருப்பி, ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார்களென்ற செய்தி அறிந்தோம்—மகிழ்ந்தோம். ஆவேசமில்லாத, அன்புப் போர்மூலம் எதையும் சாதிக்கமுடியும் என்பதற்கு உதாரணமாக விளங்கும் அவர்களைப் பாராட்டுகிறோம். போலீஸ் படையின் பொறுப்பும், சிறப்பும் மிகப் பெரியதென்றாலும், காங்கிரசாரின் ஆட்சியில் அவர்களது நிலை, மிக மிக மோசமாகியே வருகிறது. எதெதற்கோ பணத்தைவாரியிறைக்கும் 'வள்ளல்'கள் ஏழை கான்ஸ்டேபில்களின் குடும்ப பாரத்தைக் குறைக்க எதுவும் செய்ய முயலுவதில்லை—பணமில்லையெனும் பல்லவியையேபாடி வருகின்றனர்.

இது, போலீசாரின்மீது, அவர்கள் வைத்திருக்கும் 'பரம்பரை விரோதத்தின்' விளைவோ என்றுகூட நாம் சந்தேகித்ததுண்டு. அவ்வித எண்ணம் ஆச்சாரியாருக்கு இருக்கமுடியாது என்றே கருதுகிறோம் — ஏனெனில் போலீசின் இன்றியமையாமை குறித்து, பலமுறை, அவரே பேசியிருக்கிறார். ஆகவே, எவ்வகையாலும், அவர்களது கண்ணீர் காயும் வகையில், சம்பளவிகிதங்களை உயர்த்துமாறு கோருகிறோம். அதே நேரத்தில், பாதுகாப்பு கைதிகளாக அவர்களில் சிலரைப் பிடித்துப் போட்டிருப்பதன் கேட்டையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்த அடக்குமுறைப் பாதை, ஆபத்தானது. 'அவ்வழி செல்ல வேண்டாம்—அன்போடு கேட்போருக்கு அன்பைக் காட்டுக!' என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

# கோவையில் தொல்லை

## சம்பத் அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்மானத்திற்கிணங்க, ஜனவரி 4ந்தேதி நெசவாளர் தினமாக நாடெங்கும் நடைபெற பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கோவையில் அந்த தினத்தை விமரிசையாக நடத்த கோவை நகர திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டது. அந்த தினத்தின் முக்கிய நிகழ்ச்சியான கைத்தறி ஆடைகள் விற்பனை மற்றெல்லா நகரங்களையும்விட வெற்றிகரமாக நடத்தத் திட்டமிட்டு, இந்த நாளுக்குமுன் நகரின் பல பகுதிகளிலும் கூட்டங்கள் நடத்தி, 4ந்தேதியன்று நிறைய ஆடைகளை வாங்குமாறு மக்களிடம் பிரச்சாரம் செய்ய ஏற்பாடுகள் பலமாக செய்யப்பட்டிருந்தன.

எந்தவிதமான காரணங்களையும் தராமல் போலீசார் செல்வபுரம், புலியகுளம், பட்டர்மென்பேட்டை ஆகிய பகுதிகளில் கூட்டங்களுக்கனுமதி மறுத்துவிட்டனர். இந்த அநீதிகளுக்குச் சிகரம்வைப்பதைப் போன்று, 4ந்தேதி விழாவன்று மாலை சிதம்பரம் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திற்கு அன்று பிற்பகல் 2 மணிவரை அனுமதி தராமல் இருந்ததுமட்டுமல்ல, பொறுப்புள்ள அதிகாரிகள், சிதம்பரம் பூங்காவில் கூட்டம் நடத்தினால் பக்கத்து பங்களாவில் இருக்கும் கலெக்டருக்கு அமைதி கெடுகிறதென்றும், காரணம் சொல்லி அனுமதிதரப்படமாட்டாது என்று சொல்லி அனுப்பி விட்டார்கள்.

பிறகு நான் கழகத் தோழர்களிடம் கலந்துகொண்டு அனுமதி கிடைக்காவிட்டால் மீறி கூட்டத்தை நடத்துவது என்றும், எவ்வித அடக்குமுறை அமுல் நடத்தப்பட்டாலும் அதற்காளாவதுஎன்றும் முடிவு செய்து, அந்த முடிவை அதிகாரிகளுக்கு தெரிவிக்கச் செய்தேன். பிறகு அனுமதி கிடைத்தது தொல்லைகள் அத்தோடு முடிந்தன என எண்ணி கூட்டத்தைத் துவக்கினோம் ஆனால் மீண்டும் கூட்டத்தின் நடுவே நான் பேசிக்கொண்டிருப்பது கலெக்டருக்குக் கஷ்டமாய் இருக்கிறது என்றும் கூட்டம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் அல்லது ஒலிபெருக்கியைக் குறைத்துவிடவேண்டும் என்று இடையிடையே அதிகாரிகள் தொல்லை கொடுத்தார்கள். கூட்டமும் 8-45க்கே நிறுத்தப்பட்டது.

மக்கள் உரிமைகளில் அதிகாரிகளின் அனுவசியமான தலையீடு அமைதியாய் இருக்கும் கோவை நகரில் பெரும் கொந்தளிப்புகளை உண்டாக்கிவிடுமோ என அஞ்சுகிறேன். கடந்த நான்கு நாட்களாக நகரில் பல இடங்களில் கூட்டங்களுக்கு அனுமதி தரமறுத்தது பெரும் அநீதி. ஜன 4ந்தேதி நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தின் இடையிடையே புகுந்து தொல்லைதர முயன்றது கண்டனத்துக்குரியது! கூட்டம் நடந்தால் கலெக்டரின் அமைதி கெடுகிறது என்றுரைப்பது விசித்திரமானது. ஏனெனில் முன்பு வெள்ளையனாட்சி நடைபெறும்போது வெள்ளைக்கார கலெக்டர்கள் அங்கு அதே பங்களாவில்தான் வசித்து வந்தார்கள். அந்தக் காலத்தில்தான் இன்று சிதம்பரம் பூங்கா என்று அழைக்கப்படும் ஸ்டேடியம் மைதானம் நிர்மாணிக்கப்பட்டு மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல், அப்போது இன்றைய கலெக்டரின் விசித்திரப்போக்கு காணக்கூடாத ஒன்றாய் இருந்தது.

இந்தப்போக்கு நாம் சகித்துக் கொள்ளமுடியாத ஒன்றாகும். இந்தப்போக்கை மக்கள் கூட்டங்களில் கூடி நாட்டு நடப்புகளை விவாதிப்பதைத் தடுக்கும், இத்தகைய அடக்குமுறைகளை எதிர்த்தே தீருவது என்று கோவை மாவட்டக் கழகமும், கோவை நகரக் கழகமும், முடிவெடுத்திருக்கிறது. மக்கள் உரிமைகளுக்குப் போராடும் மற்ற கட்சிகளும், ஏதாவது இதற்கென நம்மால் போராட்டம் ஒன்று தொடங்கப் பெறுமேயானால் துணை புரிய வேண்டுமெனக் கோருகிறேன்.

கூட்டங்கள் நடத்த அனுமதி தேவையில்லை. இன்றிருந்த நிலைமையை மாற்றி அனுமதி பெற்றுத்தான் கூட்டம் நடத்தவேண்டுமென்று சட்டம் போட்டபோதும், இரவில் எந்நேரம்வரையிலும் பேசலாம் என்றிருந்த வழக்கத்தை மறுத்து, 10மணி வரையில்தான் ஒலிபெருக்கி வைத்துக்கொள்ளலாம் என்றுரைத்தபோதும், அந்த 10 மணியைச் சமீபத்தில் 9 மணியாகக் குறைத்தபோதும், சகித்துக் கொண்ட மக்கள் இப்போது அறவே கூட்டங்களை நடைபெறவொட்டாமல் செய்ய அதிகாரிகள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை இனி சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள்.

இந்தச் சூழ்நிலைகளை மனதில் கொண்டு அதிகாரிகளின் இன்றைய மனப்போக்கில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டுமென்று விரும்புகிறேன்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., aDrat,,vida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.